### ஜெயா தொலைக்காட்சி ஒளிப்பதிவாளர்

# த.அமல்ராஜ் மருத்துவ சிகிச்சைக்கு ரூ.2 இலட்சம் நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஜூன் 27-

ஜெயா தொலைக்காட்சியில் மூத்த ஒளிப்பதிவாளராகப் பணியாற்றிவரும் த.அமல்ராஜ் தற்பொழுது நோய்வாய்ப்பட்டு, தனியார் மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்டு வந்த நிலையில், தொடர்ந்து மருத்துவ சிகிச்சைகளை மேற்கொள்ள போதிய பண வசதி இ,ல்லாத நிலையில், அவருக்கு அரசு மருத்துவமனையில் தரமான சிகிச்சை மேற்கொள்ளவும், தனியார் மருத்துவமனையில் மேற்கொண்ட சிகிச்சை கட்டணம் செலுத்திட கூடுதல் நிதியுதவி வழங்கிடுமாறு அனைத்து பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மூலம்நேற்று(26.6.2024) முற்பகல் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வரப்பெற்றது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தனியார் மருத்துவமனையில் சிசிச்சை பெற்றுவரும் த. அமல்ராஜை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு மாற்றி தரமான சிகிச்சை அளிக்கவும், அவர் கோரியுள்ள கூடுதல் நிதியுதவியாக ரூ.2 இலட்சத்தினை உடனடியாக வழங்கிட உத்தரவிட்டார்.

மேலும், முதலமைச்சர் அவர்களின் உத்தரவினைத் தொடர்ந்து த.அமல்ராஜை உடனடியாக ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் சேர்த்து அவருக்கு தரமான சிசிச்சைகளை வழங்கிடவும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், த.அமல்ராஜ் தனியார் மருத்துவமனையில் மேற்கொண்ட சிகிச்சைக்கான கட்டணத் தொகையை செலுத்திட ஏதுவாக தமிழ்நாடு அரசின் பத்திரிகையாளர் நல நிதியத்திலிருந்து ரூ. 2 இலட்சத்திற்கான காசோலை அவரின் குடும்பத்தினரிடம் நேற்று (26.06.2024) பிற்பகல் வழங்கப்பட்டது.

பத்திரிகையாளர் நலன்களை பேணிக்காப்பதில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் த.அமல்ராஜ் உடல் நலக்குறைவு குறித்து தகவல் பெறப்பட்ட ஒரு சில மணித்துளிகளில் இந்த நிதியுதவினையும், அரசு மருத்துவமனையில் சிகிச்சையும் வழங்கிட உத்தரவிட்டுள்ளது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். காசோலையினைப் பெற்றுக் கொண்ட த.அமல்ராஜ் குடும்பத்தினர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தங்கள் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

மேலும், தங்களது கோரிக்கையினை ஏற்று உடனடியாக நடவடிக்கை மேற்கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களும் தங்களது நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.

### தேர் சாய்ந்த விபத்தில் உயிரிழந்த

# அறந்தாங்கி மகாலிங்கம் குடும்பத்திற்கு ஆறுதல் - ரூ.2 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 27-

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அருகே ராமசாமிபுரம் கிராமத்தில் நடைபெற்ற கோவில் திருவிழாவில் தேரின் கலசம் தவறி விழுந்து தேர் சாய்ந்த விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் மற்றும் ஆறுதல் தெரிவித்து நிதி உதவி அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், ராமசாமிபுரம் கிராமத்திலுள்ள ஸ்ரீமுத்துமாரியம்மன் திருக்கோவிலில் கடந்த 24.6.2024 அன்று மாலை தேரோட்டத்திற்காகத் தேரை தயார் செய்யும் பணி நடைபெற்றபோது, தேரின் மேற்பகுதியில் கலசத்தை பொருத்துகையில், கலசம் தவறிவிழுந்து தேர் ஒருபுறமாகச் சாய்ந்ததால் எதிர் பாராத விதமாக கீழே தவறிவிழுந்த விபத்தில் புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், மாத்தூர், ராமசாமிபுரம் கிராமத்தைச் சேர்ந்த மகாலிங்கம் (வயது 70) த/பெ.சபாபதி என்பருக்கு பலத்த காயம் ஏற்பட்டு சிகிச்சைக் காக பேராவூரணி அரசு மருத்துவமனைக்கு கொண்டுசெல்லும் வழியில் உயிரிழுந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர் களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த வரின் குடும்பத்தி னருக்கு இரண்டு இலட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

### சென்னை மாநகராட்சியில்

# மழைநீர் வடிகால், தூர்வாரும் பணிகள் ஆய்வுக்கூட்டம்!

## மேயர் ஆர்.பிரியா தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஜூன்.27-

பெருநகர சென்னை மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகள், தூர்வாரும் பணிகள், சாலைப் பணிகள் உள்ளிட்ட வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் மேயர் திருமதி ஆர். பிரியா தலைமையில் நேற்று (26.06.2024) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், பெருநகர சென்னை மாநகராட்சியின் அனைத்து மண்டலங்களிலும் வளைவு மழைநீர் வடிகால்கள் உள்ள இடங்களில் தூர்வாரும் நடவடிக்கைகள், மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகள் தற்போதைய நிலை, மழைநீர் வடிகால்கள் மற்றும் வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் மேற்கொள்ளப்படும் தூர்வாரும் பணிகள், நீர்நிலைகளில் காணப்படும் ஆகாயத்தாமரைகளை ரோபோடிக் எக்ஸ்கவேட்டர், ஆம்பிபியன் மற்றும் மினி ஆம்பிபியன் இயந்திரங்களைக் கொண்டு அகற்றிடும் நடவடிக்கைகள், பருவமழைக்கு முன்னதாக சுரங்கப்பாதைகளின் தொட்டிகளில் உள்ள வண்டல்களை தூர்வாரி, அங்குள்ள மோட்டார் பம்புகளின் தற்போதைய செயல்பாடுகள், வாகனப் போக்குவரத்து இல்லாத நேரங்களில் சாலைகள் மற்றும் தெருக்களில் விழும் நிலையில் உள்ள மரங்கள் மற்றும் ஆபத்தான நிலையில் உள்ள மரங்களின் கிளைகளை அகற்றுதல், மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் எரியாத தெருவிளக்குகளைக் கண்காணித்து உடனடியாக மாற்றியமைத்தல், போக்குவரத்திற்கு இடையூறாக தொங்கும் கேபிள்களை உடனடியாக அகற்றுதல் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை மேயர் ஆய்வு செய்து அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.



விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து, சென்னை மேற்கு மாவட்டத்தின் ஆயிரம்விளக்கு தொகுதி மற்றும் அணிகளுக்கு வழங்கப்பட்ட 58, 59 ஆகிய பாகங்களில், சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு கழக பணியினை பார்வையிட்டு, டட் நகர் ஊராட்சியில் வாக்கு சேகரிக்கும் பகுதிகளை நேரில் சென்று வாக்கு சேகரிப்பது குறித்து ஆலோசனைகளை வழங்கினார்.

### கும்பகோணம் – திருவாரூர் நெடுஞ்சாலையில்

# திருநரையூர் – நாச்சியார் கோயிலுக்கு புறவழிச் சாலை அமைக்கப்படுமா?

## பேரவையில் அரசு கொறடா கோவி.செழியன் கேள்வி!

சென்னை, ஜூன் 27-

கும்பகோணம் - திருவாரூர் நெடுஞ்சாலையில் திருநரையூர் - நாச்சியார் கோயிலுக்கு புறவழிச்சாலை அமைக்கப்படுமா என்று பேரவையில் அரசு கொறடா கோ.வி.செழியன் கேள்வி எழுப்பினார்.

இது பற்றிய விவாதம் வருமாறு:-

**கோவி. செழியன்:** கும்பகோணம், திருவிடைமருதூர் ஆகிய இரண்டு தொகுதிகளும் இணைந்த தொகுதிகளாகும். இந்த இரண்டு தொகுதிகளிலிருந்தும் திருவாரூர் செல்ல வேண்டுமேயானால், கிருஷ்ணாபுரம், திருநரையூர், நாச்சியார் கோவில், மாத்தூர் ஆகிய ஊராட்சிகள் வழியாகத்தான் செல்ல வேண்டும். இந்த நான்கு ஊராட்சிகளி



லும், மக்கள் தொகை அதிகமாகவும், போக்குவரத்து நெரிசல் அதிகமாகவும் இருக்கின்றன. நாச்சியார் கோவில் குத்துவிளக்குகள் உற்பத்தியில் மிகவும் புகழ் பெற்ற ஊராகும். எனவே, பள்ளிகள், கல்லூரிகள் துவங்குகின்ற, முடிகின்ற வேளைகளிலும், அரசு அலுவலர்கள் வேலைக்கு வந்து, செல்லும் நேரங்களிலும் மிகுந்த இடர்பாடு ஏற்படுகிறது. எனவே, அமைச்சர் அவர்கள், கிருஷ்ணாபுரத்திலிருந்து மாத்தூர் வரை இணைக்கக்கூடிய புதிய புறவழிச் சாலையை அமைத்துத் தந்தால், கும்பகோணத்திலிருந்து திருவாரூர் செல்கின்ற பயணிகளுக்கு வசதியாக இருக்கும். நல்ல பல திட்டங்களை செயல்படுத்தி வருகின்ற இவ்வரசு இந்த புதிய பாதையை அமைத்துத் தருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் எ.வ.வேலு:** நம்முடைய சட்டமன்ற அரசுக் கொறடா முனைவர் கோவி. செழியன் அவர்கள் தன்னுடைய கேள்வியிலேயே, நான்கு ஊராட்சிகளை உள்ளடக்கி அந்தப் பாதை போகின்றது என்று சொன்னார்கள். ஊராட்சிச் சாலைகள், ஊராட்சி ஒன்றியச் சாலைகள், கிராமச் சாலைகள் என சாலைகளிலே பல்வேறு வகைபாடுகள் இருக்கின்றன.

மாநில நெடுஞ்சாலையைப் பொறுத்தளவிற்கு மாநில நெடுஞ்சாலைத் துறை, அதேபோன்று மாவட்ட முக்கிய சாலை, மாவட்ட இதர சாலை என்ற அடிப்படையில் 3 வகைப்படுத்தப்பட்ட சாலைகள்தான் நெடுஞ்சாலைத் துறையின் நேரடி கட்டுப்பாட்டில் இருக்கிறது. எனவே அந்த 4 ஊராட்சிகளை இணைக்கிற சாலையில் ஒரு புறவழிச் சாலை அமைக்க முடியுமா என்று ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். எனவே, அந்தக் கேள்வியையே நான் மனுக்களாக எடுத்துக்கொண்டு, சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளரை அழைத்து, இங்கு புறவழிச் சாலை அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கிறதா, நெடுஞ்சாலைத் துறையின்மூலம் அமைக்க முடியுமா அல்லது ஒன்றியத்தின்மூலம் அமைக்க முடியுமா என்பதை ஆய்வு செய்து, நெடுஞ் சாலைத் துறைமூலம்தான் அமைக்க முடியும் என்று சொன்னால், இந்த ஆண்டே அதற்கான திட்ட அறிக்கை தயார் செய்வதற்கு அரசின் சார்பாக ஆணையிடப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தல் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து பாகம் எண்.186 யில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆலோசனைபடி, திருப்போரூர் ஒன்றிய பெருந்தலைவர், திருப்போரூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், திருப்போரூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எல்.இதயவர்மன் தலைமையில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வீ.விஜயகுமார், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் ஆர்.கோவிந்து, திருப்போரூர் வடக்கு ஒன்றிய துணை செயலாளர் ஏ.ரமேஷ், புதுப்பாளையம் ஊராட்சி மன்ற துணை தலைவர் ரமேஷ் ஆகியோர் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தனர். உடன் கிளைக் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அலமேலு அப்பாதுரை
### ஜூன் 27 (2001)



தி.மு.க. மகளிர் அணிச் செயலாளராகவும் – தலைமை நிலையச் செயலாளராகவும் – தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் – சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

தி.மு.க. மகளிர் அணியினைச் சிறப்பாக கட்டிக் காப்பாற்றியவர்.

1938ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி திணிப்பு எதிர்ப்பு கிளர்ச்சியிலும், பின்னர் நடைபெற்ற கறுப்புக் கொடி போராட்டம், விலைவாசி உயர்வு போராட்டம் உள்ளிட்ட பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

